செ.வெ.எண் : 59

நாள் : 21-10-2017

ந.க. எண் ஒள3/35642/2017

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருநெல்வேலி,
நாள். 17 ..10.2017

## பத்திரிக்கைச் செய்தி

01.01.2018ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறையில் திருத்தம் செய்வதற்கு இந்திய தேர்தல் ஆணையம் உத்திரவிட்டுள்ளது. இதன்படி 03.10.2017 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இந்த வுரைவு வாக்காளர் பட்டியலினை வட்டாட்சியர் அலுவலகங்கள், கோட்டாட்சியர் அலுவலகங்கள், வாக்காளர் பதிவு அலுவலகங்கள, குடியிருப்போர் நலச்சங்கங்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அனைத்து வாக்குச் சாவடி அமைவிடங்களில் வாக்காளர்கள் பார்வையிடலாம். 01.01.2018 அன்று 18 வயது பூர்த்தியடைந்தவர்கள் அதாவது 31.12.1999 வரை பிறந்த அனைவரும் வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயரினை புதிதாக சேர்த்திட மனு அளிக்கலாம். புதிதாக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க படிவம் 6, பெயர் நீக்கம் செய்ய படிவம் 7, பெயர் மற்றும் இதர திருத்தங்கள் செய்திட படிவம் 8, ஒரே சட்டமன்ற தொகுதிக்குள் முகவரி மாற்றம் செய்திட படிவம் 8ஏ மற்றும் வெளிநாடுவாழ் இந்தியர்கள் பெயர் சேர்க்க படிவம் 6ஏல் விண்ணப்பிக்க வேண்டும். இந்த விண்ணப்பங்களை 03.10.2017 முதல் 31.10.2017 முடிய உள்ள காலங்களில் நிர்ணயிக்கப்பட்டுள்ள வாக்குசாவடிகளில் சமர்ப்பிக்கலாம். 08.10.2017 அன்று அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் சிறப்பு முகாம் நடைபெற்றுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள வாக்காளர் பட்டியல் பார்வையாளர் 22.10.2017 அன்று சிறப்பு முகாம் நடைபெறும் வாக்குச்சாவடி மையங்களை பார்வையிடவுள்ளதாலும், அங்கீகிரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரதிநிதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பின்ாகள் ஆகியோருடன் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தி வைத்து 22.10.2017 அன்று பிற்பகல் 2.00 முதல் 3.00 மணி வரை ஆலோசனை கூட்டம் நடத்தவுள்ளார்கள். அன்றைய தினம் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் / நீக்கம் / திருத்தம் உள்ளிட்ட பணிகள் தொடர்பாக குறைகள் ஏதேனும் இருப்பின் வாக்காளர் பட்டியல் பார்வையாளர் அவர்களிடம் தங்களது கோரிக்கைகளை நேரிலோ மனு மூலமாகவோ தெரிவிக்கலாம்.

மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும்
மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருநெல்வேலி.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி